ISBN: 978-93-5810-640-4

# தொல்காப்பியர் குறிப்பிடும் சமூக அமைப்பும் சமயமும்

**(முனைவர் அ.இருதயராஜ்)**

**Date of submission : 22-12-2025 Date of acceptance : 22-12-2025**
**Date of Publication: 30-01-2026**
**Corresponding auther's Name :Dr.A.Irudhayaraj**
**Email : irudhayaraj.sl@velsuniv.ac.in**

பண்டை தமிழ் மக்களை அவர்கள் வாழ்ந்த நிலத்தின் தன்மைக்கு ஏற்ப, நிலத்தை நான்கு வகையாகப் பகுத்து அங்கு வாழ்ந்தர்வர்களின் தொழிலுக்கு ஏற்ப ஏற்றத்தாழ்வற்ற சமுதாயத்தைப் படைத்துக்காட்டுகின்றார் தொல்காப்பியர்.

**குறிஞ்சி**

குறிஞ்சி மலையும் மலைச் சார்ந்தப் பகுதியமாகும். இந்நில மக்கள் விலங்குகளுடன் போராடித் தன்வாழ்வை அமைத்துக்கொண்டதால், விலங்குகளின் இயல்பை உற்று நோக்கி அறியும் அறிவைப் பொற்றான். இதனால், விலங்குகளுடன் பழகும் வாய்ப்பு ஏற்பட்டது. மனிதன் கால்நடைகளைத் தனக்கு உதவுமாறும் பின்னர் விலங்குகளைக் கொண்டே விலங்குகளைப் பிடிக்கும் விந்தையையும் அறிந்தான்.

குறிஞ்சிமலைகளில் வாழ்ந்த மனிதன் வேட்டைத் தொழிலுடன் உழவுத் தொழிலும் மேற்கொண்டான். மலைச்சாரல்களில் உள்ள அகில் சந்தனம்போன்ற மரங்களை அழித்து தோரை, நெல், திணை, மிளகு, கடுகு, இந்து மஞ்சள்போன்றவற்றை விளைவித்து வந்தான். இதனை மதுரைகாஞ்சியில்,

**'ஐவங்காழ் கொன்று கோட்டின் வித்திய**
**குற்கதிர்த் தோரை நெடுங்கால் ஐயவி**
**ஐவன வெண்ணெலொடு அகில் நீடி**
**இஞ்சி, மஞ்சள், பைங்கறி பிறவும்**
**புல்வேறு தாரமொடு கல்லகத்துր ஈண்டி**
**திணைவினை சாரற் கிளிகடி பூசல்"**

(மதுரைகாஞ்சி)

என்ற பாடல் வழி உணரமுடியும். குறிஞ்சி நிலத்து மகளிர் முதன்மையான வேளாண்மைபயிர் தினை. ஆந்நில மக்கள் மலைச்சாரங்களில் தினைவிதைத்திருப்பர். வேங்கை மரத்தின் மீது பரன் அமைத்து தினைப்புனத்திற்கு காப்பதற்காக மக்களை அனுப்புவதாக சங்கப்பாடல்கள் காணப்படுகின்றது.

**தெய்வம்**

மலைகளிலும், பொந்துகளிலும் பெரும் மரங்களிலும் வாழ்ந்த மாந்தனுக்கு இரவுப் பொழுது இன்னலுக்குரியதாக இருந்ததால் பகற் பொழுதை எதிர்ப்பார்த்து வாழ்ந்து வந்தான். கதிரவனின் வரவு எப்போது நிகழும் எனக் காத்துக்கொண்டிருந்தான். கதிரவனின் வரவு அவர்களுக்கு மகிழ்ச்சியையும் தெம்பையும் அளித்தது. அவன் தந்த ஒளியால் உணவு தேடவும், பகற்பொழுதை அச்சமின்றி கழிக்கவும் வழிகோலிய அக்கதிரவனின் மீது மாந்தனுக்கு நெருக்கம் ஏற்பட்டது. இவ்வாறு கதிரவனே மாந்தனின் முதற்கடவுளானான்.

மேலைநாடுகளில் சேயோன் என்பது மலைகளில் வாழ்ந்திருந்தவன் என்று பொருள்கொள்ளப்பட்டது. எகோவா என்ற யூதர்களின் கடவுள் சீயோன் மலையின்மீது வாழ்ந்திருந்தார்.

**முனைவர் அ.இருதயராஜ், உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, வேல்ஸ் அறிவியல் தொழில் நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம், பல்லாவரம், சென்னை 117.**

ISBN: 978-93-5810-640-4

பண்டையக் காலத்தில் சே என்ற ஓரேழுத்துச் சொல் மீன், குழந்தை, தொலைவு அகியவற்றை குறிப்பதற்குச் சொல்லப்பட்டன.

**சே- சேய்மை, தொலைவு**

அண்மை என்பது அருகில், சேய்மை என்பது தொலைவில் என்று குறித்தது. சே என்ற சொல்லின் நீட்சியாகவே சேயன் அல்லது சேயோன் பிறந்ததாகக் கூறுவர். சே என்பது சிவப்பையும் குறித்தது (தமிழ்–தமிழ் ஆங்கிலம் சொற்களஞ்சியம் ப.272) சேதாம்பல் என்பது சிவந்த நிறமுடைய ஆம்பல் மலர் ஆகும். எனவே சேயோன் என்பது சிவந்தவன் என்று பொருள் கூறலாம்.

எனவே நெடுந்தெலைவில் மலையில் இருந்தவன் சிவப்பு நிறமாய் ஒளிர்ந்தவன் கதிரவன் எனவே சேயோன் என்பது கதிரவனைக் குறிப்பதாகக் கொள்ளப்படுகிறது. கதிரவனை மேலை நாடுகளில் கடவுகளாக வணங்குகிறனர். 'செமஸ், [shemesh] என்ற எபிரேயக் கடவுள் கதிரவனைக் குறிப்பதாகும்.

"எல்லோன் என்ற எபிரேயச் சொல்லுக்கு கதிரவன் என்று பொருள். எல்-ஒயிம்; [el-oeim] எல்-ஒவ [el-ovh] எல்-சடை [el-shadi] எல்-ஒன் [el-yen] ஆகிய சொற்கள் யாவும் எல் என்ற கடவுளின் தன்மையை விளக்கும் சொற்களாகவே உள்ளன".

குறிஞ்சி நில மக்கள் தங்கள் இடுக்கண் இன்னல்களிலிருந்து காக்கும் இறைவனை, தாங்கள் வாழ்ந்திருந்த இடத்துக்கு சேய்மையிலேயே வைத்துக் கொண்டனர். குறிஞ்சித் திணையின் தெய்வமாகத் தொல்காப்பியர் நிலத்தின் மையப் பொருண்மைக்கு ஏற்ப சேயோன் எனச் சுட்டுகிறார். இதனை,

**"சேயோன் மேய மை வரை உலகமும்"**

(தொல்.பொருள். அகம். நூ.5)

என்ற நூற்பா வழி அறியமுடிகின்றது.

இதன் தொடர்ச்சியாக இளங்கோவடிகள் காவிரி நாடனின் ஆனைச்சக்கரம் போல் அழகிய மலைகளை முகடுகளாக உடைய மேருமலையினைச் சுற்றி வலம் வரும் ஞாயிற்றைப்போற்றுவோம் என்று கூறுகின்றார். இதனை,

**'திங்களைப் போற்றுதும் திங்களைப் போற்றுதும்!**
**ஞாயிறு போற்றுதும்! ஞாயிறு போற்றுதும்!"**

என்னும் சிலப்பதிகாரப் பாடல் வழி அறியலாம். எனவே உலகின் முதற் கடவுள் கதிரவனே என்பது தெள்ளத்தெளிவான உண்மையாகும்.

**முல்லை நில மக்கள்**

மலைகளில் வாழ்ந்திருந்த மக்கள் மலையை விட்டு கீழிறங்கி மலையடிவாரத்திலுள்ள காடுகளில் பரவி வாழ்ந்த நாகரிகமே முல்லை நிலமாகும். ஆடு மாடுகளைப் பழக்கிக் குடும்பத்திற்கு பயன்படும் வகையில் வளர்க்க தொடங்கி, ஆடு மாடுகள் சொத்தாக எண்ணி வாழ்க்கையாகும். இந்நிலத்தில் வாழும் மக்கள் ஆயர் எனப்படும் இவர்களை, நச்சினார்க்கினியர் உரையில் ஆயர் கோவலர், இடையர், பொதுவர், ஆய்ச்சியர் இடையச்சியர் என்றும் தலைமக்கள் பெயர்களாக அண்ணல் தோன்றல் குறும் பொறைநாடன் என்றும் பெண்டிர் பெயர்களாக ஆய்ச்சியர், ஆய்மக்கள், கிழத்தி நல்லாள், பொதுவியர், கோவித்தியர் மாயோல் என்பனவும் கூறப்பட்டுள்ளன. முல்லை நில சூழலுக்கு ஏற்றவாறு தம் தொழிலை அமைத்துக்கொண்டனர் முல்லை நில மக்கள்.

**முல்லை தெய்வம்**

தொல்காப்பியர் முல்லைத் திணையின் தெய்வம் "மாயோன்" என்பார். நம்பியகப்பொருள் ஆசிரியர் "நெடுமால்" எனச் சுட்டுகிறார். ஆனால் முல்லைத் திணையில் வாழும் மக்களோ காட்டின் அடர்த்தியான கருமையை மாயோன் எனக் கருதி வணங்கியுள்ளனர் என்கிறார் தொல்காப்பியர். இதை,

**"மாயோன் மேய காடு உறை உலகமும்"**

(தொல்.பொருள். அகம். நூ.5)

என்பர் தொல்காப்பியர்.

ISBN: 978-93-5810-640-4

மை என்ற வேர்ச் சொல்லினின்றும் பிறந்ததே மாய் - மாயோன் என்ற சொல்லாகும், மை என்பது இருட்டு, கருமை என்றவாறு பொருள் கொள்ளப்படும். மை என்ற சொல்லுக்கு மயக்கம், மயங்கிய வழியில் புணர்தல் என்பதும் பொருளாகும். எனவே கருமையாய்த் தோன்றுவதால் ஏற்படும் மயக்கம், குழப்பம் குறித்து 'தெளிவற்ற' என்ற பொருளும் உணரப்பட்டது. க்ருஷ்ண என்ற சொல் கருமை என்ற பொருளையே தந்தது.

கிரேக்கத்தில் சொல்லப்பட்ட க்ரைஸ்ட் (Christ) என்ற கிரேக்கச் சொல்லிற்கான மூலம் கருமை என்ற தமிழ்ச் சொல்லே. 'மாகம் என்ற கருமையைக் குறித்த தமிழ்ச் சொல் வடமொழியில் மேக என்று திரிந்து கருமுகிலையே குறித்தது. முல்லை நில மக்களின் முதல் தேவையான நீர், கால்நடைகளுக்கும் புல்வெளிகளுக்கும் வேண்டுவதாயிற்று. நீரைப் பொழிவிக்கும் கருமுகிலை கண்ட போது அம்மக்கள் மகிழ்ந்தனர். அம்முகிலையே தங்கள் கடவுளாகவும் கொண்டனர். குறிஞ்சி நிலத்து மக்களுக்கு மழை வேண்டியதில்லை. அதற்கானத் தேவையும் இருந்ததில்லை. மாறாக முல்லை நில மக்கள் மழையையே நாடியிருந்ததால் மழைமுகில் அவர்களது தெய்வமாயிற்று.

**மருத நில மக்கள்**

நால்வகை நிலங்களுல் நாகரிகம் மிக்க வாழ்க்கையினை நல்குவது மருதநிலமாகும். நிலத்தைப் பண்படுத்தி நீர் வளத்துடன் உழவை சிறப்புடன் நடத்திவருவாயைப் பெருக்கி வாழும் வாழ்வே மருத நில வாழ்வு. இங்கு வாழ்ந்த மக்கள் ஏரிகள் கிணறுகளிலிருந்து நிலங்களுக்கு நீர் பாய்ச்சினர். நெற்பயிர் செய்தலும் நிலத்தை உழுது சேறாக்குவர். சேற்றிணைநிரவிக் சமப்படுத்திப் பின் நெல் விதை விதைப்பர். எனவே மருத நிலங்களில் வாழ்ந்த மக்களை களமர், உழவர், கடையர், உழத்தியர், கடைசி என்பன வழங்க்கப்படுகின்றன. தலைமக்கள் பெயர்களாக மகிழ்நன், ஊரன் மனபோன் ஆகியோரைக் குறிப்படுகின்றார். இதனை,

**'வருபடைதாங்கில் பெயர்புறத்தார்த்துப்**
**பொடுபடை தடூஉம் கொற்றமும் உழுபடை**
**ஊன்றுசால் மருங்கின் ஈன்றதன் பயனே"**

என்ற பாடல் வழி உணரமுடியும்.

**தெய்வம்**

மருதத் திணையின் தெய்வம் இந்திரன் என உரையாசிரியர்கள் குறிப்பிடுவர். ஆனால், மருத்திணைப் பாடல்களில் இந்திரனை குறித்த செய்திகள் ஏதும் குறிப்பிடபெறவில்லை. மாறாக அணங்கு என்பவையாக, மூன்று பாடல்களிலும் கடவுள் என்பவையாக, மூன்று பாடல்களிலும் அச்சம் தரும் தெய்வம், மனையில் காணப்படும் தெய்வம் எனபன போன்ற தெய்வம் என்பதைக் குறிப்பால் உணர்த்துபவையாகச் சுட்டப்பட்டுள்ளன. தொல்காப்பியர் மருதநிலக் கடவுளை வேந்தன் என்று கூறுகிறார்.

**வேந்தன் மேய தீம்புனல் உலகமும்"**

தொல்.பொருள். அகம். நூ.5)

என்ற பாடல் வழி உணரமுடியும்.

மருத நிலம் மழையையும் நீரையும் நம்பி வாழ்ந்திருந்த நிலப்பகுதியாகும். எனவே, மழைதான் மருதநிலத்தின் கடவுளாகும். மழைக்கு விண்துளி என்ற பெயரும் உண்டு. "விண்துளியைத் தரும் கடவுள் விந்தன் அல்லது வேந்தன் எனப்பட்டான்" என்றும் கூற்று இவற்றை மெய்ப்பிக்கின்றது.

வேய் என்ற சொல்லுக்கு உயர்ந்த இடத்துடன் தொடர்புண்டு. வேய்தல் என்ற சொற்களை ஒப்புக்கு உயர்ந்த இடத்தில் இருந்தவன். 'வேய் - வேய்ந்தன் - வேந்தன் எனப்பட்டதாகப் பாவாணர் கூறுகிறார்" "இந்திரன் என்ற சொல்லுக்கு மாமழை என்பது பொருள்" எனவே இந்திரன் நீர் என்ற பொருளில் சொல்லப்பட்ட தமிழ்க் கடவுளே என்றுரைப்பர்.

'தமிழகத்துச் சூழலில் தோன்றும் கோடை மழையானது, மிகுந்த ஒலியுடன் கூடிய இடி முழக்கங்களால் உணரப்படுவதால், மழையையும் இடியையும் இணைந்து ஒரு

ISBN: 978-93-5810-640-4

உருவகத்தைத் தமிழர் சொல்லி வைத்தனர். இந்திரனே மழையாகவும் இடியே அவனது போர்க்கருவியாகவும் உருவகம் செய்யப்பட்டது” என்று கூறுகின்றார் ம. சோ. விக்டர். கோடைமழை தோன்றும் குறிகளையும், அக்குறிகளால் தோன்றும் வானியல் மாற்றங்களையும் பரிபாடல் தெளிவாக விளக்குகிறது.

**நெய்தல் நில சமூக வாழ்க்கை**

கடலும் கடல் சார்ந்த இடமும் நெய்தல் நிலமாகும். நெய்தல் நில மக்களின் வாழ்க்கை முழுதும் கடலை நம்பியே உள்ளது. கடல்வாழ் இயற்கை வளங்களான மீன்களைப் பெறுவதற்காக வலை, தூண்டில் திமிலி போன்ற கருவிகளைப் பயன்படுத்தியுள்ளன. இவர்கள் மீன்களைப் பிடித்து விற்பனைச் செய்ததுப் போக எஞ்சியவற்றை காயவைத்து உணங்கலாக்கிப் பதப்படுத்தி வைத்தனர் . இதனை,

**‘புலவு மீன் வென் உணங்கல்**
**புள்ஓப்பிக் கண்டார்க்கு**
**அபவநோய் செய்யும் அணங்கிதுவே”**

என்ற பாடல் வழி உணரமுடியும்.

**தெய்வம்**

நெய்தல் நிலக் கடவுளாக வருணன் குறிக்கப்படுகின்றான்.

**வருணன் மேய பெருமணல் உலகமும்**
**முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் எனச்**
**சொல்லிய முறையான் சொல்லவும் படுமே”**
**தொல்.பொருள். அகம். நூ.5)**

என்ற பாடல் வழி உணரமுடியும்.

வரி என்பது வளி, கடல் என்றும் அணம் என்பது மேலே, உயரே என்றும் பொருள். அண்ணம் என்பதின் சுருக்கமே அணம். வருணன் என்பது நிலத்தின் மேலே பரவியுள்ள நீரை விடாமல் பிடித்துக் கொண்டிருக்கும் தன்மை என்பதாகும்.

கடல்நோக்கி வழிபடுவோர்க்குக் கடலில் தோன்றிவந்து அருள் செய்பவன் வருநன் எனப்பட்டான். வருநன் வருணன் ஆயிற்று” என்று விளக்கம் தருவார் ஆ. சிவலிங்கனார். எனவே நெய்தல் நிலக் கடவுள் கடலாகும்.

**முடிவுரை**

தமிழர் வாழ்வியல் நிலம் சார்ந்தது. அவரர்களது வாழ்வும் இயற்கை சூழலுடன் பின்னிப்பிணைந்தது எனவே அவன் வாழும் நிலத்தின் தன்மைக்கு ஏற்ப தன்னையும் தன்தொழிலையும் தகவமைத்துக்கொண்டான். உலகியல் சூழல்களை அடிப்படையாகக் கொண்டு தான் சமூகமாக வாழ்கின்றான்.

---

**துணைநின்றவை**

1. தொல்காப்பியம்.பொருள். அகம்
2. நன்னூல்
3. புறநானூறு
4. மணிமேகலை
5. மதுரைகாஞ்சி